Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 6, 2021

செவ்வாய்க்கிழமை 06, 2021 | ஒளி: 07 கதிர்: 40 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | free



■ க. அகரன்

## ‘சீனா தமிழர்களின் நண்பனல்ல’

தமிழர் தாயகத்தை விட்டு, சீனா வெளியேற வேண்டுமெனத் தெரிவித்த வவுனியா மாவட்டத்தில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், தமிழர்களின் நண்பர் சீனா அல்ல எனவும் கூறினர்.

தொடர்ச்சி P2



# ‘சிறுவர் கொரோனா’ தொற்றுகிறது

## நுவரெலியாவில் 37 சிறுவர்களுக்கு தொற்று உறுதியானது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா, ஆவாஎலிய மயான வீதியிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றைச் சேர்ந்த சிறுவர்களில் 37 பேருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

“அந்தப் பராமரிப்பு நிலையத்தின் பணியாளர் குழுவில் 8 பேருக்கும் நேற்று (5) தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது” என நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

குறித்த காப்பகத்தில் சிறுவர்கள் எட்டுப் பேருக்கு கொரோனா தொற்று முதலில் உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து அங்கிருக்கும் சிறுவர்கள் உள்ளிட்ட 40 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்போதே, புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்று உறுதி செய்யப்பட்ட அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சிறுவர் காப்பகம் முழுமையாகத் தொற்று நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின்

## ‘நிபந்தனைகளுக்கு அடிபணிய முடியாது’

பொருளாதார முன்னேற்றத்துக்காக, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிய வேண்டிய தேவை கிடையாதெனத் தெரிவித்த நிதி மூலதனச்சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால், இரு மாத காலத்துக்குள் நாடு வழமை நிலைக்குத் திரும்புமென்ற நம்பிக்கையையும் விதைத்தார்.

தொடர்ச்சி P2



15 வயதான சிறுமியின் விவகாரத்தில்

# மாலைத்தீவு முன்னாள் அமைச்சர் கைது

### 300 பேரைத் தேடி வலை: இதுவரை 32 பேர் கைது

### அறை வழங்கிய முகாமையாளரும் கைது

கல்கிஸை பகுதியிலிருந்து 15 வயதான சிறுமியை இணையத்தளம் மூலம் பாலியல் நடவடிக்கைகளுக்கு விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை, நேற்று (05) திங்கட்கிழமையுடன் 32 ஆக அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2



முல்லைத்தீவு உறவினர்கள்

## கவனயீர்ப்புப் போராட்டம்

### எத்தடை வரினும், எமது உறவுகள் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால், நேற்று (05) காலை, கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

முல்லைத்தீவு மாவட்டத்தில் தடுப்பூசிக்கு

## ‘60 ஆயிரம் பேர் தகுதி’



■ செ.கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில், 60 ஆயிரம் பேர் தடுப்பூசியைப் பெற தகுதியுடையவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என, மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.உமாசங்கர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புதிய நியமனத்துக்கு ஞானசாரர் கடும் எதிர்ப்பு

நீதியமைச்சர் அலி சப்ரியின் சில செயற்பாடுகளால் தாங்கள் மகிழ்ச்சியடைய முடியாதெனத் தெரிவித்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், அவரது ஆசானான ஒஸ்தாக் மன்சூரும், அவரும் இணைந்து வழங்கிய புதிய நியமனம் குறித்தும் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

தொடர்ச்சி P2

## 4 நாள்களும் சபை கூடும்

### நம்பிக்கையில்லா தீர்மானம் 19,20 ஆம் திகதிகளில்

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, கடந்த வாரங்களில், வாரத்துக்கு ஓரிண்டு நாள்கள் மட்டுமே சபை கூடியது. எனினும், இவ்வாரம் நான்கு நாள்களும் சபை கூடும்.

தொடர்ச்சி P2

‘முரண்பாடுகள் முற்றிவிட்டன;

## பசிலுடன் பங்காளிகள் விரைவில் சந்திப்பர்’



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவுக்கும், பெரமுனவில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சி தலைவர்களுக்கும் இடையில் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தையொன்று முன்னெடுக்கப்பட உள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

தொடர்ச்சி P2

‘உ/த பரீட்சை விண்ணப்பங்களை

## இணைய வழியில் மட்டுமே அனுப்பவும்’

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை, இணையவழி (Online) ஊடாக மாத்திரம் அனுப்பிவைக்குமாறு, பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ‘பொறிக்குள் சிக்க நாம் தயாரில்லை’

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில், கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எட்டப்படுமெனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் சாஹர காரியவசம் எம்.பி, எதிர்க்கட்சியின் பொறிக்குள் சிக்கிக்கொள்ள நாங்கள் தயாரில்லை என்றார்.

தொடர்ச்சி P2

## ‘இறுதி முடிவும் ராஜபக்ஷ எனில் வியப்பதற்கில்லை’



முன்னாள் அமைச்சர் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இவ்வளவு காலம் என்ன செய்தார்? எனக் கேள்வியெழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார், அவரும் பெயிலா? அல்லது வெற்றிப்பெறுகிறாரா? என்பதைப் பார்ப்பதற்கு சில மாதங்கள் பொறுத்திருக்க வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2



நிபந்தனைகளுக்கு உட்பட்டது
Dialog 4G SIM அட்டை மற்றும் 4G தொலைபேசியினை கொண்ட முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு பொருந்தும்.

PAGE 1 தொடர்ச்சிகள்

## ‘நிபந்தனைகளுக்கு அடிபணிய முடியாது’

“சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண முடியும். ஆனால், சமூக மட்டத்தில் பல பிரச்சினைகள் தோற்றம் பெறும். நாணய நிதியத்தின் நிபந்தனைகள் தற்போது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. ஆகையால், சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது” என்றார்.

நிதியமைச்சில் நேற்று (05) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கை பெற்றுக் கொண்டுள்ள அரச முறை கடன்களை செலுத்துவதில் நெருக்கடி நிலை ஏற்படுமென எதிர்த் தரப்பினர் குறிப்பிடும் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்த அவர், 2019ஆம் ஆண்டு இறுதிகாலாண்டில் இருந்து தற்போது வரையில் அரச முறை கடன்கள் உரிய காலத்தில் செலுத்தப்பட்டுள்ளன. அரச முறை கடன்களை செலுத்துவதில் எவ்வித நெருக்கடி நிலையும் ஏற்படாது என்றார்.

பொருளாதார நெருக்கடியை சீர் செய்ய உள்ளக மட்டத்தில் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அந்நிய செலாவணியை ஊக்குவித்தல், ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தல், இறக்குமதிகளை மட்டுப்படுத்தல், ஏற்றுமதியை அதிகரித்தல் மற்றும் அரச பொது சேவைகளை மேம்படுத்தல் என பல்வேறு தரத்திலான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்றார்.

ஜி.எஸ். பி பிளஸ் வரிச்சலுகை இடை நிறுத்தப்பட்ட காலத்தில் நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவித்த அவர், வரிச்சலுகையை பெற்றுக் கொள்வதற்காக நாட்டின் இறையாண்மையை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது என்றார்.

# மாலைத்தீவு முன்னாள் அமைச்சர் கைது

நேற்றையதினம் நால்வர் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவித்திருந்த பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, அவர்களில் ஒருவர், மாலைத்தீவு பிரஜையாவார் என்றும் அவருக்கு வயது 45 என்றும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட மாலைத்தீவு பிரஜை, முன்னாள் மாநில நிதி அமைச்சரும், டிராகுவின் முன்னாள் தலைவருமான முகமது அஷ்மாலி என்பவராவார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதனை மிஹாரு செய்தி சேவை, இலங்கை பொலிஸாரை மேற்கோள்காட்டி வெளியிட்டுள்ளது.

அத்துடன், அந்தச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதற்காக அறையொன்றை வழங்கியிருந்த ஹோட்டல் ஒன்றின் முகாமையாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றையதினம் கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், எதிர்வரும் 16ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மேலும் 300 பேர் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரான பேராசிரியர் முதித்த வித்தியாப்பத்திரண தெரிவித்துள்ளார்.

## ‘சீனா தமிழர்களின் நண்பனல்ல’

வவுனியா மாவட்டத்தில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் மேற்கொள்ளப்படும் கவனயீர்ப்புப் போராட்டம், நேற்று (05) 1,600 நாள்களை எட்டியுள்ள நிலையில், போராட்டப் பந்தலுக்கு முன்பாக, கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த உறவுகள், கடந்த 74 ஆண்டுகளாக, தமிழர்கள் அரசியல் தீர்வுகளைக் கேட்டு வருகின்றனரென்றனர்.

ஐ.நா பாதுகாப்புக் குழுவில் தமிழர்களுக்கான நீதியை சீனா எதிர்க்கிறது என்பதற்காக, சீனா தமிழர்களின் நண்பர் அல்ல எனத் தெரிவித்த அவர்கள், எனவே, தமிழ் தாயகத்தை விட்டு சீனா வெளியேற வேண்டும் என்றும் கூறினர்.

மனித உரிமைகளில் அக்கறை கொண்ட அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகள், இலங்கையில் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்த தாமதிக்காமல் செயற்பட வேண்டுமென்றும், உறவுகள் கோரினர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் கொடிகளை ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ‘60 ஆயிரம் பேர் தகுதி’

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், முல்லைத்தீவு மாவட்டத்தில், 30 வயதுக்கு மேற்பட்டோர், கர்ப்பிணிகள், வயோதிபர்கள் உள்ளிட்டவர்களென, 60 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி ஏற்றவேண்டும் என்றார்.

இதனை விட, புதுக்குடியிருப்பு, வெலிஓயா ஆகிய பிரதேங்களில் உள்ள இரண்டு ஆடைத்தொழிற்சாலைகளிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கு, தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்நிலையில், மாவட்டத்தில் உள்ள ஏனையோருக்கும் தடுப்பூசி ஏற்ற பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்டத்தில், தடுப்பூசி ஏற்றும் சமூக நிலையமாக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்நிலையில், ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வாவின் அறிவுறுத்தலின் பேரில் புதிய நடமாடும் தடுப்பூசி ஏற்றும் சமூக நிலையங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

‘இதற்கமைய, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சமூக நிலையமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

‘தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வருவோர், மின்சாரப் பட்டியல் அல்லது தொலைபேசி கட்டண சிட்டையுடன் நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம சேவகரால் வழங்கப்பட்ட உறுதிப்பத்திரம் அல்லது அடையாள அட்டை அல்லது வாக்காளர் அட்டையை கொண்டு வருவது அவசியமாகும்’ என்றும், உமாசங்கர் தெரிவித்தார்.

## புதிய நியமனத்துக்கு ஞானசார கடும் எதிர்ப்பு

பொது பலசேனா அமைப்பின் தலைமையகத்தில் நேற்று (5) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தேசிய பாதுகாப்பு அமைச்சின் கீழிருக்கும் இலங்கையின் தேசிய பாதுகாப்பு ஆய்வு நிறுவனத்தின் ஆலோசகராகவும் உத்தியோகப்பூர்வமற்ற அதிகாரியாகவும் கலாநிதி ரொஹான் குணரட்ணவை நியமித்துள்ளனர்.

சிங்கப்பூர் பிரஜையான இவர், அரச சார்பற்ற அமைப்பொன்றின் உறுப்பினராவார். தொழில் இல்லாமல் இருந்தவருக்கே இப்பதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த நியமனத்தால் தாங்கள் திருப்தியடைய முடியாது என்றார்.

2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக பொதுபல சேனாவை கடுமையாக விமர்சித்தவர்தான் இந்த ரொஹான் குணரத்ன ஆவார். யுத்தக்காலத்தில், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் சேர்ந்து கொண்டு யுத்தத்தை முடிக்க முடியாதென கூறி அரசாங்கத்தை கடுமையாக விமர்ச்சித்தவரே இவர் என்றார்.

சிங்கள இன அடிப்படைவாதத்தை வெற்றிக்கொள்ள வியர்வை சிந்தினோம் எனத் தெரிவித்த ஞானசார தேரர், இனியும் அமைதியாக இருக்கமாட்டோமென எச்சரித்தார்.

இந்த நியமனத்துக்கு தாங்கள் கடுமையாக எதிர்ப்பை வெளியிடுவதாகத் தெரிவித்த அவர், சரியென்றால் பாதுகாப்பு அமைச்சை நாம் சுற்றிவளைக்க வேண்டும். ஆனால், கொரோனா பிரச்சினையால் அது முடியாமல் உள்ளது என்றார்.

## கவனயீர்ப்புப் போராட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால், 2017ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்புப் போராட்டமானது, நேற்று (05) 1,580ஆவது நாள்களாகவும் தொடர்கிறது.

இந்நிலையிலேயே, நேற்று (05), சுகாதார நடைமுறைகளைப் பேணி, கவனயீர்ப்புப் போராட்டமொன்றை, உறவுகள் முன்னெடுத்தனர்.

‘எங்கள் உறவுகளை எங்கே மறைத்து வைத்தாய்?’, ‘நட்டஈடும் வேண்டாம்: மரணச்சான்றிதலும் வேண்டாம்’, ‘வட்டுவாகலில் வைத்து இராணுவத்திடம் கையளித்த உறவுகள் எங்கே?’, ‘பாடசாலை மாணவரும் தமிழரின் பிள்ளைகளும் பயங்கரவாதிகளா?’ என பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தங்கியவாறும், ‘வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்’, ‘எங்கே எங்கே உறவுகள் எங்கே’, ‘சர்வதேசமே பதில் கூறு’ ஆகிய கோஷங்களை எழுப்பியவாறும், கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

எத்தடை வரினும், தமது உறவுகள் தமக்கு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனத் தெரிவித்த போராட்டக்காரர்கள், தமக்கான நீதியைப் பெற்றுத்தர அரசியல் தலைவர்கள் குரல்கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இதேவேளை, குறித்த போராட்டத்தில் அதிகளவான புலனாய்வாளர்கள் வருகைதந்து, போராட்டக்காரர்களை வீடியோ, புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ‘பொறிக்குள் சிக்க நாம் தயாரில்லை’

அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளிவிட முயற்சிக்கும் இந்தப் பொறிக்குள் சிக்கிக்கொள்ள நாங்கள், தயாரில்லை, எனினும், அடுத்தடுத்த கட்டங்கள் குறித்து ஆராய்ந்து முடிவெடுப்போம்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சி என்றடிப்படையில், எமது நிலைப்பாட்டில் தாம் உறுதியாகவே இருப்பதாகத் தெரிவித்த அவர், எதிர்க்கட்சியை நாம் பலப்படுத்த மாட்டோம். எனினும், கட்சி என்பதற்கப்பால், நாடு என்ற ரீதியில் தீர்மானங்களை எடுப்போம் என்றார்.

நம்பிக்கையில்லாப் பிரரணையின் போது, நடுநிலை வகிப்பதா? உங்களுடைய முடிவு? என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், மேற்படி விவகாரத்தில், கட்சி என்றடிப்படையில் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட முடிவுகளில்தான் இன்றும் இருக்கின்றோம் என்றார்.

எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே நாங்கள் நின்கின்றோம். நாடு பெரும் நெருக்கடியில் உள்ளது. இப்படியான சந்தர்ப்பத்தில் குழப்பிய குட்டையில் மீன்பிடிப்பதற்கு எத்தரப்பினருக்கும் இடமளிக்கமாட்டோம். மிகவும் சிரமப்பட்டு உருவாக்கப்பட்ட இந்த அரசாங்கத்தை குழப்பவும் இடமளிக்கமாட்டோம் என்றார்.

## ‘பசிலுடன் பங்காளிகள் விரைவில் சந்திப்பர்’

இதனை நீர்வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, நேற்று (05) உறுதிப்படுத்தினார்.

பங்காளி கட்சிகளின் தலைவர்கள் வசமுள்ள பதவிகள் திட்டமிட்ட வகையில் பறிக்கப்படுகின்றன. கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்சவின் அமைச்சின் கீழிருந்த உர நிறுவனம், அடிப்படை காரணங்கள் எவையுமின்றி விவசாயத்துறை அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது..

“கூட்டணி என்பதற்காக தவறை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களின் தன்னிச்சையான செயற்பாடுகள் பங்காளி கட்சிகளை புறக்கணிக்கும் வகையிலேயே உள்ளன” என்றார்.

“வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிற்கு எதிராக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரிவசம் செயற்பட்ட விதம் அடிப்படையற்றது” என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இதன்போது தெரிவித்தார்.

## 4 நாள்களும் சபைக்கூடும்

அதற்கான தீர்மானம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், நேற்றுக்கூடிய நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போதே எடுக்கப்பட்டது.

இதேவேளை, மின்வலு அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை எதிர்வரும் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் நடத்தவும் திகதி குறிக்கப்பட்டது.

எரிபொருள் விலையேற்றத்தை அடுத்தே, ஐக்கிய மக்கள் சக்தியினரால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘இறுதி முடிவும் ராஜபக்‌ஷ எனில் வியப்பதற்கில்லை’

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், அமைச்சு ஒன்று இல்லாமல் எதனையும் செய்யமுடியாதெனக் கூறுவது விந்தையாகவே இருக்கிறது என்றார்.

“இன்னும் சிறிது காலம் செல்லும் போது யுத்த வெற்றியின் திரைக்குப் பின்னாலும் பசில் ராஜபக்‌ஷவே இருந்தாரெனக் கூறினாலும் நாம் ஆச்சரியப்படப் போவதில்லை. எனவே, பசில் ராஜபக்‌ஷ தொடர்பில் தற்போது எதையும் கூற நான் முற்படவில்லை” என்றார்.

அத்துடன், “ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அவரே சகலவற்றையும் செய்தார். ஜனாதிபதி செயலணிகளினும் தலைவராகவும் அவர் செயற்பட்டுள்ளார். ஆனால், அமைச்சு ஒன்று இல்லாமல் எதனையும் செய்ய முடியாது என்றும் கூறுகின்றனர்” என்றார்.

> **சிறிது காலம் செல்லும் போது யுத்த வெற்றியின் திரைக்குப் பின்னாலும் பசில் ராஜபக்‌ஷவே இருந்தாரெனக் கூறினாலும் நாம் ஆச்சரியப்பட போவதில்லை. எனவே, பசில் தொடர்பில் எதையும் கூற முற்படவில்லை**

“எனவே, சில மாதங்கள் பொறுத்திருந்து பார்ப்போம். மக்கள் இவ்வாறு தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. 69 இலட்சம் வாக்குகளில் தற்போது எத்தனை வாக்குகளை அவர்களால் பெற்றுக் கொள்ள முடியும் ? எனவே, பாராளுமன்றத்துக்கு வருவதற்கு பசிலுக்கு இடமளிப்போம்” என்றார்.

“பசில் ராஜபக்‌ஷவுக்கும் நாட்டை நிர்வகிக்க முடியாது. சகலருக்கும் 70 வயது கடந்துவிட்டது. எனவே, நாமல் ராஜபக்‌ஷ வே அடுத்தத் தலைவரென இறுதியாகக் கூறினாலும் புதுமையடைவதற்கு ஒன்றுமில்லை” என்றும் மரிக்கார் குறிப்பிட்டார்.

பதியூதீன் சகோதரர்களின் மனுக்கள்

## ஐவரில் நால்வர் விலகினர்

ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், அவரது சகோதரர் ரியாஜ் பதியூதீன் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு விசாரணையிலிருந்து தான் விலகுவதாக உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் மஹிந்த சமயவர்தன, நேற்று (5) நீதிமன்றுக்கு அறிவித்தார்.

சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை உடனடியாக விடுவிக்குமாறு தெரிவித்து, ரிஷாட் பதியூதீன் மற்றும் ரியாஜ் பதியுதீனால் தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், மூர்து பெர்ணான்டோ, அச்சல வெங்கப்புலி மற்றும் மறிந்த சமயவர்தன ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எனினும், தனிப்பட்ட காரணங்களால் இந்த மனு விசாரணையிலிருந்து தான் விலகுவதாக நீதியரசர் மஹிந்த சமயவர்தன அறிவித்துள்ளார்.

அதற்கமைய, இந்த மனுவை ஆராய்வதிலிருந்து விலகிய நான்காவது நீதியரசராக இவராவார். இதற்கு முன்னர் உயர்நீதிமன்ற நீதியரசர்களான ஜனக் த சில்வா,யசந்த கோதாகொட, ஏ.எச்எம்.டி.நவாஸ் ஆகியோர் விலகிக்கொண்டனர். அவர்களும் தனிப்பட்ட காரணங்களையே முன்வைத்தனர்.

## இணைய வழியில் மட்டுமே அனுப்பவும்

பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகள் அனைவரும் இந்த அறிவித்தலை பின்பற்ற வேண்டுமென அத்திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வரை, உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடைமுறை நேற்று(05) முதல் ஆரம்பமானது.

www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk என்ற இலங்கை பரீட்சைகள் திணைக்கத்தின் இணையத்தளங்களின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் அலைபேசி செயலியான DoE என்ற செயலியினூடாக உரியவாறு விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பிவைக்க முடியுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு Online ஊடாக விண்ணப்பிப்பதற்கு உரிய பயனாளர் பெயர் (USERNAME) மற்றும் கடவுச்சொல் (PASSWORD) ஆகியன அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

> **Online விண்ணப்பங்கள் தொடர்பான சிக்கல்கள் குறித்து 1911 என்ற துரித தொலைபேசி இலக்கத்தினூடாக மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். 011 2 784 537 / 011 2 784 208 / 011 3 188 350**

Online விண்ணப்பங்கள் தொடர்பான சிக்கல்கள் குறித்து 1911 என்ற துரித தொலைபேசி இலக்கத்தினூடாக மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். 011 2 784 537 / 011 2 784 208 / 011 3 188 350 / 011 3 140 314 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாகவும் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

13 சுகாதாரத் தொழிற்சங்கங்கள்

# தொடர் பணி பகிஷ்கரிப்பு

இலங்கையில் 13 சுகாதாரத் தொழிற்சங்கங்கள், நேற்று (05) முதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதாக ஒன்றிணைந்த சுகாதாரத் தொழிற்சங்கங்களின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, சுகாதார தொழிற்சங்கங்கள் அடையாள பணிப் பகிஷ்கரிப்புகளில் ஈடுபட்டு வந்த நிலையில், தற்போது தொடர் பணிப் பகிஷ்கரிப்பை அறிவித்துள்ளன.

தாம் நேற்று முன்தினம் (04) வரை கால அவகாசம் வழங்கியிருந்தும் தமது கோரிக்கைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுத் தரத் தவறியதாக ரவி குமுதேஷ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பணிப் பகிஷ்கரிப்புகளால் பி.சி. ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் முடியாத நிலை ஏற்படும் என சுகாதார சங்கங்கள் தெரிவித்துள்ளதுடன், தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படாத போது, பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதாக அம்புலன்ஸ் சாரதிகள் சங்கம் கூறியுள்ளது.

இதேவேளை, சுகாதாரத் தொழிற்சங்கங்களின் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை காரணமாகத் தாமே பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.




# இராணுவத்தினர் 4 பேருக்கு விளக்கமறியல்

■ ரஸீன் ரஸ்மின்



புத்தளம், கற்பிட்டி, நுரைச்சோலை பிரதேசத்தில் நபரொருவரைக் கடத்திச் சென்று தாக்கியதாக சந்தேகிக்கப்படும் இராணுவத்தினர் நான்கு பேரையும் இம்மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, புத்தளம் மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சேருநுவர, கல்லாறு இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ கெப்டன் உள்ளிட்ட நான்கு இராணுவத்தினரே, இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி, நுரைச்சோலை பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவரைக் கடத்திச் சென்று, அச்சுறுத்தல் விடுத்து தாக்கியமை தொடர்பில் சேருநுவர, கல்லாறு இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவத்தினர் நால்வர் சம்பந்தப்பட்டிருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

பின்னர், இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவத்தில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன், இராணுவத் தளபதியின் விசேட பணிப்புரைக்கமைய இராணுவ பொலிஸாரால் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, இராணுவ கெப்டன், இராணுவ கோப்ரல், லான்ஸ் கோப்ரல் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களான நான்கு இராணுவ வீரர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினரால் நுரைச்சோலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். தனிப்பட்ட தகராறு காரணமாகவே இவர்கள் இவ்வாறு குறித்த நபரைக் கடத்தி அச்சுறுத்தல் விடுத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நுரைச்சோலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சந்தேக நபர்களான நான்கு இராணுவ வீரர்களும், புத்தளம் மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, சந்தேக நபர்களை 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

‘ஆசிரியர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் வரை

# பிராந்திய கற்றலுக்கு செல்லாதீர்கள்’

■ ரா.கமல்



நாடளாவிய ரீதியில் 2,000 பிராந்திய கற்றல் நிலையங்களில் கடமையாற்ற நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு, தடுப்பூசி செலுத்தி மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரை அந்நிலையங்களுக்குச் செல்ல வேண்டாமென இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் (04) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அச்சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க, கல்வி அமைச்சு, மாணவர்களின் கல்வியை சீரமைக்க முன்னெடுக்கும் எந்தத் திட்டத்தையும் எதிர்க்க வில்லை என்றும் ஆனால், அதற்கான உரிய பாதுகாப்பு வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

“மத்திய மாகாணத்தில் 442 நிலையங்களும் வடமேல் மாகாணத்தில் 345 நிலையங்களுமாக இந்நிலையங்கள் நாடு முழுவதும் உருவாக்கப்பட்டு உள்ளன.

“நாட்டில் இன்னமும் கொரோனா நிலைமை சீராகவில்லை; குறையவும் இல்லை. எனவே, பிராந்திய கற்றல் நிலையங்களில் கடமையாற்ற அழைக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள், அதிகாரிகள் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்படல் வேண்டும்.

“தடுப்பூசி பெற்றுக் கொள்ளாது, இந்தக் கடமைகளில் கலந்துகொள்ள வேண்டாமென நாம் ஆசிரியர்களிடம் வேண்டுகிறோம்” என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



# கலந்துரையாடல்...

இந்திய துணைத் தூதரகரின் இல்லத்தில் அரசியல் கலந்துரையாடலொன்று நேற்று (05) நடைபெற்றபோது, துணைத் தூதுவர் வினோத் கே. ஜேக்கப், துணைத் தூதரக முதல் செயலாளர் பெஸ்டியன் என். சாக்கோ, முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ( ஜ.ம.கா) பிரதித் தலைவர் கலாநிதி சுரேஸ் கங்காதரன், நிர்வாக செயலாளர் செல்வி ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

விசேட சுற்றி வளைப்புகள்;

# ஹெரோய்னுடன் ஐவர் சிக்கினர்



பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையில் 210 கிராம் ஹெரோய்னுடன் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று (05) தெரிவித்தார்.

களனி, ராகமை ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் 80 கிராம் ஹெரோய்னுடன் 33, 31 ஆகிய வயதுடைய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், களுத்துறை தெற்கு பொலிஸாரால் 120 கிராம் ஹெரோய்னுடன் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கொழும்பு -14, கிராண்ட்பாஸ் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் எட்டு கிராம் ஹெரோய்னுடன் 36 வயதுடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

# சாரா ஹூல்டன் ஹக்கீம் எம்.பி சந்திப்பு



பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹூல்டனுக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று, கொழும்பிலுள்ள அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான வெஸ்ட் மினிஸ்டர் ஹவுஸில் நேற்று (05) நடைபெற்றது.

# ‘சீனாவின் ஆதரவு பயனற்றது’



பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு ஒத்துழைப்புப் பெற வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியம் போன்றவைகளுடனான தொடர்புகளே சாத்தியப்படும் எனத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, “சீனாவின் ஆதரவு பயனற்றதாகும்” என்றும் கூறினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்ற கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்குள் சர்வதேச ரீதியில் அங்கிகரிக்கப்பட்ட அமைப்புகளால் இலங்கைக்கு எதிராக பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதோடு, அமெரிக்காவின் காங்கிரஸ் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையொன்று தொடர்பில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றிலிருந்து மீள்வதற்கு அரசாங்கம் சர்வதேசத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

‘அரசாங்கத்தை குழப்புபவர்கள்

# தாராளமாக வெளியேறலாம்’



அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகித்துக்கொண்டு, அரசாங்கத்தை குழப்பும் நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்கள் அரசாங்கத்தில் இருந்து தாரளமாக வெளியேறலாம் என, இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் முன்வைக்கும் கருத்துகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்த அவர், இவர்களின் செயற்பாடுகளைக் கவனித்தால், வேறு ஒரு வேலைத்திட்டத்தில் இயங்கிக்கொண்டிருப்பது போன்று தெரிகின்றது. ஆகவே, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளுக்கு நாம் இடமளிக்க மாட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டதுடன், பசில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதும், அவருக்கான பாராளுமன்ற உறுப்புரிமையை விட்டுக்கொடுப்பதும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தனிப்பட்ட தீர்மானமாகும் என்றார்.

இந்த விடயத்தில் ஏனைய கட்சியினர் தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறிய செஹான் சேமசிங்க, பசில், பாராளுமன்றம் வருவது கூட்டணிக்கட்சிகளுக்கு பிரச்சினை என்றால் அவர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேற முடியும் என்றும் கூறினார்.

‘பத்திக் உற்பத்தி இராஜாங்க அமைச்சு

# நகைச்சுவை என்றால் விட்டுக்கொடுக்கட்டும்’

“பத்திக் உற்பத்தி இராஜாங்க அமைச்சை, நகைச்சுவையான அமைச்சாகக் கருதினால் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அதனை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஏனைய உறுப்பினர்களுக்கு விட்டுக் கொடுக்கலாம்” என, இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து இதைக் கூறிய அவர், அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் கருத்துகளைக் குறிப்பிடுவதை விடுத்து, அரசாங்கத்தில் இருந்து வெளியேறி தனியாக அவர் போராடலாம் என்றார்.



“தேசிய உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்கில் பல புதிய இராஜாங்க அமைச்சுகளை ஜனாதிபதி அறிமுகப்படுத்தினார். பத்திக் உற்பத்தி மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சும் அதனடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது. இந்த அமைச்சைப் பயனற்ற நகைச்சுவையான அமைச்சு என பத்திக் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார். பத்திக் மற்றும் உள்நாட்டு ஆடைக் கைத்தொழிலை மேம்படுத்தும் பொறுப்பு இராஜாங்க அமைச்சர் என்ற ரீதியில் அவருக்கு உண்டு. அமைச்சுகளை நகைச்சுவையானதாகக் கருதினால், அந்த அமைச்சுடன் தொடர்புடைய துறைகள் ஒருபோதும் முன்னேற்றமடையாது. அமைச்சினை முன்னேற்ற முடியாவிட்டால் அவர் இராஜாங்க அமைச்சு பதவியை இராஜினாமா செய்யலாம்.

“அமைச்சரவை அமைச்சினை எதிர்பார்த்த தயாசிறிக்கு அவரது எதிர்பார்ப்பு நிறைவேறாத காரணத்தாலேயே இவ்வாறான கருத்துகளை வெளியிட்டு வருகின்றார்” என்றும் லன்சா கூறியுள்ளார்.


இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அற்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு.
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

அடுத்துவரும் நாள்களில்

# ‘இறுதி முடிவை எடுப்போம்’

■ எஸ்.நிதர்ஷன்



அடுத்து வரும் நாள்களில், நாங்கள் அழைக்க விரும்பிய தலைவர்களோடு பேசி, ஒரு குடையின் கீழ், ஒரே கூட்டாகச் செயற்படுவதற்கான முடிவை, இறுதியாக எடுக்க இருக்கிறோம் என, டெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள டெலோ அலுவலகத்தில், நேற்று முன்தினம் (04) மாலை நடைபெற்ற தமிழ்க் கட்சி தலைவர்களுக்கு இடையிலான சந்திப்புக் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்துத் தொடர்ந்துரைத்த அவர், அரசாங்கத்துக்கு எதிரான பலமான சக்தியாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தில், தேசியத்தை நேசிக்கின்ற அனைத்து தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்ததாகவும், இதில், சுரேஷ் பிரேமசந்திரன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா, சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர் எனவும் ஏனையவர்கள் கலந்துகொள்ளவில்லை எனவும் கூறினார்.

இந்த வாரம், பாராளுமன்றம் கூடிய பின்னர், அடுத்த கட்டமாக மீண்டும் ஒரு கூட்டான, பலமான அமைப்பாகச் செயற்படுவதற்கான முடிவை எடுத்திருப்பதாகத் தெரிவித்த அவர், இதன் பிரகாரம், அடுத்து வரும் நாள்களிலேயே, தாங்கள் அழைக்க விரும்பிய தலைவர்களோடு பேசி, இறுதியாக ஒரு குடையின் கீழ், ஒரே கூட்டாகச் செயற்படுவதற்கான முடிவை எடுக்கவிருப்பதாகவும் கூறினார்.

“உண்மையிலேயே, எல்லோரையும் அரவணைத்துப் போக வேண்டும் என்பதுதான் எங்களுடைய பிரதான நோக்கம். அந்த வகையிலே, நாங்கள் மீண்டும் அந்தக் கட்சித் தலைவர்களுடன் இது சம்பந்தமாகக் கலந்தாலோசித்து, நேரே சென்று, அவர்களுடன் பேசி, அவர்களை இந்தப் பலமான ஒற்றுமைக்குள் கொண்டு வருவோம்” என்றும் கூறினார்.

“நாங்கள் சி.வி. விக்னேஸ்வரன் தரப்புக்கும் அழைப்பு விடுத்திருந்தோம். அந்த வகையில், மீண்டும் அவர்களைச் சந்திக்க இருக்கின்றோம். அவர்களைச் சந்தித்து, ஒற்றுமை தொடர்பில் பலமான கூட்டாகச் செயற்படுவதற்கு முயற்சியை மேற்கொள்வோம். அவர்களும் அதற்கு விரும்புவார்கள். அந்தவகையில், ஒற்றுமையை உருவாக்கி அரசாங்கத்தினுடைய எதிர்ப்பைத் தடுக்க வேண்டும். எங்களுடைய இனத்துக்காக எந்த விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்” என்றும், அவர் கூறினார்.

அத்துடன், புலம்பெயர்ந்த உறவுகளையும் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டுத் தமிழர்களையும் இணைத்து, பலமான சக்தியாகக் காட்ட வேண்டுமென்றும், அவர் தெரிவித்தார்.

மேலும், ‘ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்’ என்று, ஆண்டவர் மேல் பழியை போட்டுவிட்டு இருக்க முடியாது. ஒவ்வோர் அங்குலமாக எங்களுடைய நிலங்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன என்றும், செல்வம் எம்.பி தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: சாரா உயிருடன் இல்லையெனின்

# ‘எனது கணவனை விடுவியுங்கள்’

■ கனகராசா சரவணன்



“உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுடன் தொடர்புபட்ட ‘சாரா’ என்பவர் உயிருடன் இல்லையென ஊடகங்கள் வாயிலாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். எனவே, சாராவை இந்தியாவுக்குத் தப்பியோட உதவி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட எனது கணவரான தேவகுமாராவை விடுவியுங்கள்” என அவரது மனைவி டிலோஜினி கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு, மாங்காடு பகுதியிலுள்ள அவரது வீட்டில் நேற்று முன்தினம் (04) ஊடக சந்திப்பொன்றை நடத்தியே, அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில், “எனது கணவரான தேவகுமாரை, ‘சாரா’ என்ற புலத்தினியை இந்தியாவுக்கு தப்பிச் செல்ல உதவி செய்ததாக சந்தேகத்தில் சி.ஐ.டியினரால் கடந்த வருடம் 7 மாதம் 11ஆம் திகதி வீட்டில் வைத்துக் கைது செய்தனர்.

“அவர் மீது சாட்டப்பட்ட குற்றம் எதுவும் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் கொழும்பில் இருந்து கல்முனை நீதிமன்றத்துக்கு கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி அழைத்து வந்து, மட்டக்களப்பு சிறையில் அடைத்து வைத்துள்ளதுடன், சட்டமா அதிபரிடம் இருந்து ஆவணம் வந்ததும் விடுவதாகத் தெரிவித்தனர். ஆனால், அது தொடர்பாக இதுவரையும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

“அண்மையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ‘சாரா’ உயிருடன் இல்லையென ஊடகங்கள் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்படி இருக்கும் போது, எனது கணவர் செல்வராசா தேவகுமார், ‘சாரா’வை இந்தியாவுக்குத் தப்பியோட உதவி செய்தது என்பது, எப்படிச் சாத்தியமாகும்” என அவர் கேள்வியெழுப்பினார்.

அத்துடன், தனது கணவர் நிரபராதி என்றும் தனது நான்கு பிள்ளைகளின் எதிர்காலம், அவர்களது கல்வி போன்றவற்றில் கவனம் செலுத்தி, அவரை விடுவித்துத் தருமாறும், அரசியல்வாதிகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



கிராம சேவையாளரை

## தாக்கியதை கண்டித்து போராட்டம்

■ பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்

கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட காணியொன்றைப் பார்வையிடச் சென்ற கிராம சேவையாளரைத் தாக்கியதைக் கண்டித்து, நேற்று (05) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலக முன்றலில் மதிய வேளையில் ஒன்றுகூடிய கிராம சேவகர்கள், கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்ததுடன், அதன் இறுதியில் பிரதேச செயலாளர் ஜெ.அதிசயராஜிடம் மகஜரையும் கையளித்தனர்.

இதன்போது, ‘கிராம உத்தியோகத்தரின் பாதுகாப்பை உறுதிப்படுத்து’, ‘எமது பிரிவின் கடமையை எம்மை செய்யவிடு’, ‘அரச கடமையைச் செய்கின்ற கிராம சேவகரைத் தாக்கியதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்’, ‘அரச அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு செய்யாதே’ போன்ற வாசகங்களைப் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தமையைக் காண முடிந்தது.



மோட்டார் சைக்கிள் விபத்து;

## ஓட்டமாவடி இளைஞன் பலி

■ எச்.எம்.எம்.பர்ஸான்

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஓட்டமாவடி பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய தஸ்கீர் இல்ஹான் எனும் இளைஞன் விபத்துக்குள்ளாகி, நேற்று (05) மரணித்துள்ளார்.

இந்த விபத்து, பொலன்னறுவை - தம்பாளை பகுதியில் வைத்தே இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வேகமாகப் பயணித்த இளைஞன், வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதில் ஒன்றில் மோதி உயிரிழந்துள்ளார்.

இளைஞன், அண்மைக்காலமாக தம்பாளை பிரதேசத்தில் வசித்து வந்த நிலையில், இவ்வாறு விபத்துக்குள்ளாகி மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்த குறித்த இளைஞனின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக பொலன்னறுவை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





## சௌபாக்கியா உற்பத்தி கிராமம்

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில், வேணாவில், கைவேலி ஆகிய கிராமங்களை இணைத்து, சௌபாக்கியா உற்பத்தி கிராமத்துக்கான ஆரம்ப பணிகள், நேற்று (05) முன்னெடுக்கப்பட்டன. இதற்கமைய, தோல்பொருள்கள், பத்திக் உற்பத்திகள், ஆடை உற்பத்திகளை மேற்கொள்வதற்காகப் பொதுக்கட்டம் அமைப்பதற்கான அடிக்கல்லை, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ். ஜெயகாந்த் நாட்டிவைத்தார்.

(படப்பிடிப்பு: செ.கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்)

சுகாதார நிலைய வளாகம்

## மிதிவெடி அபாய பகுதியாக அடையாளம்

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தண்ணீரூற்று பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய வளாகம், மிதிவெடி அபாய பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளது.

குறித்த வளாகத்தில், நேற்று முன்தினம் (04) துப்புரவு பணியை மேற்கொள்ளும் போது, நிலத்தில் புதையுண்ட நிலையில், வெடிபொருளொன்று இனங்காணப்பட்டது.

இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், குறித்த பகுதியை மிதிவெடி அபாய பகுதியாக அடையாளப்படுத்தியதுடன், நீதிமன்ற உத்தரவுக்கமைய, வெடிபொருளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர்.



## நீரில் மூழ்கி மீனவர் பலி

■ ஜவ்பர்கான்

கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பங்குடாவெளி பிரதேசத்தை சேர்ந்த 76 வயதுடைய சின்னத்தம்பி நடராசா எனும் மீனவர், புத்தம்புரி குளத்து நீரில் மூழ்கி, நேற்று (05) அதிகாலை மரணித்துள்ளார்.

நேற்றுக் காலை குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த பிறிதொரு மீனவர், நடராசாவின் தோணி குளத்தில் நிற்பதையும் அவரை அதில் காணவில்லை என, அருகே சென்று பார்த்துள்ளார்.

இதன்போது, தோணியிலிருந்து விழுந்து நீரில் மூழ்கி, நடராசா என்பவர் மரணித்திருப்பதையும், அவரது ஒரு கால் மட்டும் தோணிக்குள் வலையில் சிக்குண்டு இருப்பதையும் கண்டுள்ளார்.

வலிப்பு நோயாளியான நடராசாவுக்கு, தோணியிலிருக்கும் போதே வலிப்பு ஏற்பட்டதால்தான் குளத்துக்குள் விழுந்து மரணித்திருக்கிறார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதியின் கட்டளைக்கமைவாக, கரடியனாறு பொலிஸாருடன் சம்பவ இடத்துக்கு சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டார்.

அத்துடன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

‘வடக்கின் வசந்தம்,

## கிழக்கின் உதயத்தை பசில் முன்னெடுத்தார்’

பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பசில் ராஜபக்ஷ பதவி வகித்த காலகட்டத்தில் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்வாதாரம் சார்ந்த விடயங்களில் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டிருந்தார் என பின்தங்கிய கிராமிய பிரதேசஅபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்

அதற்காக, வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தார் என்றும் அவர் தெரிவித்தார். அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில், “இலங்கை அரசியல் வரலாற்றில் பல திருப்புனைகளுக்கு காரணகர்த்தாவான பசில் ராஜபக்ஷ, மிக விரைவில் மீண்டும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராகவும் முக்கிய பொறுப்புகளை உள்ளடக்கிய அமைச்சராகவும் பதவியேற்கவுள்ளார்.

“அண்மைக் காலமாக, ஜனாதிபதியின் பொருளாதார புத்தெழுச்சி, வறுமை ஒழிப்பு செயலணிக்குத் தலைமை தாங்கி, நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான பல வேலைத்திட்டங்களையும் அவர் முன்னெடுத்திருந்தார்” என்றார்.

## வாள்வெட்டுக் குழு அட்டகாசம்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், கொடிகாமம், கெற்பேலி பகுதியில், நேற்று முன்தினம் (04) மாலை, வாள்வெட்டுக் குழுவொன்று அட்டகாசத்தில் ஈடுபட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

கெற்பேலி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் வாள்களுடன் புகுந்த கும்பலொன்று, வீட்டில் இருந்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததுடன், வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தி விட்டு, அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில், கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





## சந்திப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

அண்மையில், கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) மொஹமட் சாத் கத்தக், கிளிநொச்சி பாதுகாப்பு படைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரணசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது நடைமுறையில் உள்ள சிவில்-இராணுவ உறவுகள் குறித்து மகிழ்ச்சியைத் தெரிவித்த பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், இதுபோன்ற செயற்பாடுகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

இதைத் தொடர்ந்து, நினைவுச் சின்னங்களையும் பரிமாற்றிக்கொண்டனர்.

தோட்டங்கள் முடக்கப்பட்டதால்

# மக்கள் பட்டினியில் வாடும் அவலம்

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்



கொரோனா தொற்றால் இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மதுளை, நிவித்திகல தோட்டப் பகுதிகள் பல தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதால், இங்கு வசிக்கும் மக்கள் பட்டினியில் வாடும் அவலம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, பெல்மதுளை, போபெத்த, நிவித்திகல, நொரகல்ல ஆகிய தோட்டப் பகுதிகளில் வசிப்பவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டு உள்ளதாக இரத்தினபுரி மறுமலர்ச்சி சங்கத்தின் செயலாளர் கே. தியாகேஸ்வரன் தெரிவித்தார்.

கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து,குறித்த தோட்டங்கள் ஜூன் மாதம் 23ஆம் திகதியிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த இரண்டு தோட்டங்களைச் சேர்ந்த சமுர்த்தி பயனாளிகளுக்கு மாத்திரம், அரசாங்கத்தின் 5,000 ரூபாய் கிடைத்துள்ள நிலையில், ஏனையவர்கள் எவ்வித கொடுப்பனவுமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், இவர்களுக்கு அரசாங்கமோ அல்லது தனியார் அமைப்புகளோ கூட, எவ்வித உதவிகளையும் செய்ய முன்வரவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.







## நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம்...

அசேதனப் பசளைக்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளதால், விவசாயிகள் பாதிப்பை எதிர்கொள்வதைச் சுட்டிக்காட்டி, நுவரெலியா நகரில் நேற்று (05) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள், அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

(ஆ.ரமேஸ், டி.சந்ரு, டி. சங்கீதன்)

## பச்சை பங்களாவில் சுருக்கென கொட்டிய குளவிகள்

■ துவாரகஷான்

அக்கரப்பத்தனை, சென். ஜோர்ஜ் பச்சை பங்களா தோட்டத்தில் நேற்று (05) காலை கொழுந்து பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்களை குளவிகள் கொட்டியதால், ஆறு பேர் அக்கரபத்தனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இரண்டு ஆண்தொழிலாளர்களும் நான்கு பெண் தொழிலாளர்களுமே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

## மலையக விழிகள் உதவும் கரங்கள்

■ ஆ.ரமேஸ்.பி.சிவா



‘மலையக விழிகள் உதவும் கரங்கள்’ அமைப்பின் 50ஆவது உதவும் கரம் பணி, நேற்று முன்தினம் (04) முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய, கொத்மலை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அரங்கலை தோட்டத்திலும் நானுஓயா, கிலாசோ, உடரதல்ல ஆகிய தோட்டங்களிலும் லுனுவத்தை, புதுமலை தோட்டத்தில் உள்ளவர்களுக்கும் உலருணவு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. அமைப்பின் தலைவர் எஸ். குகநேஸ்வரனின் வழிகாட்டலுக்கு அமைய, இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.









நிரந்த வீடுகளைக் கோரி

## சென். ஜோன்ஸ் தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

### கலந்துரையாடலுக்கு நிர்வாகம் அழைப்பு

■ ஆ.ரமேஸ்

‘புரூக்ஸேரன்ஜ்’ பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இராகலை, சென். ஜோன்ஸ் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (05) காலை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த தோட்டத்தைச் சேர்ந்த 25 தொழிலாளர் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லாமையால், அவர்கள் உறவினர் வீடுகளில் தற்காலிகமாக வசித்து வருகின்ற நிலையில், அவர்களுக்கும் வீடுகளை வழங்குமாறு தெரிவித்து, குறித்த தோட்டத்தைச் சேர்ந்த 188 தொழிலாளர்களும் இவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளனர்.

தோட்டக் காணியில் இடங்களை ஒதுக்கி வழங்குமாறும் வீடற்ற தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் ஊடாகப் பல கோரிக்கைகளை தோட்ட நிர்வாகத்திடம் முன்வைத்தும் உரிய தீர்வு கிடைக்காத நிலையில், பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.



மாவனெல்லயில்

## சேதன பசளை உற்பத்தி நிலையம்

■ என்.ஆராச்சி

சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை மூலம் சேதன விவசாய நிலங்களை மேம்படுத்தும் ‘பசுமையான இலங்கை’ என்ற பெயரில் சேதன பசளை உற்பத்தி நிலையங்களை ஆரம்பிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமைய, கேகாலை மாவட்டத்தின் மாவனெல்ல, ஹிங்குல சிறு தேயிலைத் தோட்ட அதிகார சபை வளாகத்தில் சேதன பசளை உற்பத்தி நிலையம் நேற்று முன்தினம் (04) ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், இதன் மூலம் மாதாந்தம் ஐந்து தொன்னும் வருடத்துக்கு 60 தொன் சேதனப் பசளையை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த உற்பத்தி நிலைய ஆரம்ப நிகழ்வில், தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.



## கொட்டகலையில் 25 பேருக்கு தொற்று உறுதி

■ எம்.கிருஸ்ணா

கொட்டகலை பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட பகுதிகளில், 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களோடு தொடர்பைப் பேணிய 119 பேருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை நேற்று (5) கிடைத்த நிலையிலேயே, 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சென்.கிளேயர், யதன்சைட், லொப்கில், யுலிபீல்ட், பத்தனை, ரொசிட்டா தோட்டப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

வாகனங்களின் மாதாந்த தவணைக் கட்டணங்களை

## சுருட்டிய அதிகாரிக்கு வலை வீச்சு

■ பாலித ஆரியவன்ஸ

பில்லியன் ரூபாய் நிதி மோசடியில் ஈடுபட்டு,பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியுள்ள பதுளையயில் இயங்கும் தனியார் வங்கியொன்றின் அதிகாரியைக் கைதுசெய்வதற்கான விசாரணையை பதுளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

குறித்த வங்கியின் வாகன தவணைக் கடன் கொடுக்கல் வாங்கல் பிரிவில் கடமையாற்றும் சந்தேகநபர், வாகனங்களைப் பெறுபவர்களுடன் நெருக்கமாகப் பழகி, இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்

■ நீலமேகம் பிரசாந்த்

நுவரெலியா, பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரியில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நுவரெலியா பிரதேச சபையின் தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் நேற்று (5) நடைபெற்றது.

இதன்போது கல்லூரி தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு, அதன் முகப்பு நுழைவாயில் அமைக்கப்பட்டு, அதன் திறப்பு விழா, விளையாட்டு மைதானம் புனரமைப்பு,



அடிக்கல் நாட்டு நிகழ்வு தொடர்பாகவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமான விடயங்கள் ஆராயப்பட்டன.

இக்கலந்துரையாடலில், கல்லூரியின் அதிபர், உப அதிபர் , பழைய மாணவர் சங்க செயலாளர், பெற்றோர், ஆசிரியர் சங்க செயலாளர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு

## சினோ:.பாம் தடுப்பூசிகள்

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

பலாங்கொடை பிரதேசத்தில் 1,569 ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு சினோர்ஃபாம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதென, இப்பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இதற்கமைய, பலாங்கொடை மெலிபன் ஆடைத் தொழிற்சாலையில் 1,194 ஊழியர்களுக்கும் ஒபனாயக்க மெலிபன் ஆடை தொழிற்சாலையில் 375 ஊழியர்களுக்கும் இத்தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டு உள்ளன.

# வெடித்துச் சிதறும் முன்பே உரிய தீர்வு காண்பது உகந்தது

தனிமைப்படுத்தல் சட்டம் கடுமையாக அமல்படுத்தப்பட்டிருந்தாலும், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களும் கோரிக்கைகளை முன்வைத்த வலியுறுத்தல் ஆர்ப்பாட்டங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

பல தளங்களில் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கைதிகள்கூட கூரையின் மீதேறியிருந்து கோஷமெழுப்பினர்; ஆனால், வாக்குறுதிகளை நம்பி, அவர்கள் கீழே இறங்கினர். எனினும், வாக்குறுதிகளின் மீது நம்பிக்கை வைக்காத தரப்புகள், போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்கின்றன.

நாடு, முழுமையாகத் திறக்கப்படாத நிலையில், அங்கொன்றும் இங்கொன்றுமாக நடத்தப்படும் போராட்டங்கள், ஓரிடத்தில் குவிக்கப்படுமாயின், அரசியல் ரீதியில் நிச்சயம் நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் நிலைமையே அரசாங்கத்துக்கு ஏற்படும்.

ஒருமாதத்துக்குப் பின்னர், நாடு திறக்கப்பட்ட நாளன்றே, பல்கலைக்கழக மாணவர்கள், கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஒன்றுதிரண்டு, அரசாங்கத்துக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர். விவசாயிகளும் போராட்டங்களில் குதித்துள்ளனர். பெருந்தோட்டத் தொழிலாளர்களும் ஆங்காங்கே போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

வடக்கில், காணாமல் போனவர்களைத் தேடியலையும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களும் வலுவடைந்துள்ளன. ஆக, தனிமைப்படுத்தல் சட்டம் அமலில் இருக்கும் வேளையிலும் போராட்டங்கள் வலுப்பெற்றிருக்கின்றன.

தனிமைப்படுத்தல் சட்டத்தை வைத்துக்கொண்டு, பல்வேறு விடயங்களை அரசாங்கம் அரங்கேற்றிவிட்டது. ஆனால், போராட்டங்களைப் பார்க்குமிடத்து, வெடித்துச் சிதறுவது வெகுதொலைவில் இல்லையென்பது புலனாகிறது. ஏனெனில், தொழிலாளர்கள், விவசாயிகள் இறங்கிவிட்டனர்; ஆசிரியர்களும் அழுத்தங்களைக் கொடுக்கின்றனர். ரயில் தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன. பொதுப் போக்குவரத்து இன்னும் வழமைக்குத் திரும்பாமையால், வேலைநிறுத்தத்தின் தாக்கத்தை உணர்ந்து கொள்ளமுடியவில்லை. இந்நிலையில், 14 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, 10 சுகாதார தொழிற்சங்கங்கள், தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன.

இக்காலப்பகுதியில், கொரோனா தடுப்பூசி ஏற்றுவதை இன்னுமின்னும் விரைவுபடுத்த வேண்டும். இல்லையேல், அடுத்த அலையும் வந்துவிடும். அதற்கு சுகாதார துறையினரின் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

அத்தரப்பினர் மட்டுமன்றி, எத்தரப்பினர் கோரிக்கைகளை முன்வைத்தாலும், செவிசாய்க்க வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும். உடனடியாகத் தீர்க்கவேண்டிய பிரச்சினைகளாயின் உடனடியாகத் தீர்க்கவேண்டும்.

இதேவேளை, தருணம் பார்த்துத் தங்களுடைய கோரிக்கையை முன்வைக்கவும் தொழிற்சங்கங்கள் முயலக்கூடாது. நம்முன்னே நிற்கும் பொது எதிரி, கொரோனாவாகும். அக்கொரோனாவை விரட்டியடிக்க வேண்டிய தலையாக பொறுப்பும் கடமையும் எம் ஒவ்வொரிடத்திலும் உள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

ஆக, பயணக்கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் இக்காலப்பகுதியில், தடுப்பூசியை செலுத்திக்கொள்ளும் செயற்பாட்டைத் துரிதப்படுத்த வேண்டும். அதேபோல, வாயையும் மூக்கையும் மூடிக்கொண்டால்தான், நாடு திறக்கப்படும் என்பதையும் சகலரும் நினைவில் கொள்வது அவசியம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சில குடும்பங்களின் பெற்றோர்கள், தங்கள் சுமைகளைக் குறிப்பிட்ட ஒரு மகன் அல்லது மகளிடமே சுமத்தி விடுகின்றனர். மற்றப் பிள்ளைகளை எதுவும் கேட்பதும் இல்லை.

குடும்பத்தை ஒருவர் மட்டும் தாங்குவதால், அவரது எதிர்கால நலன்களைச் சிந்திக்காத பெற்றோர் பலர் இருக்கின்றார்கள். உழைப்பவரை இளைக்க விடக் கூடாது. உடலில் வலு இருக்கும் வரை குடும்பத்தைக் கவனிப்பவர், வயது முதிர முதிர இவர்களின் நிலை என்ன?

எல்லோரும் விலகி ஓட, தனிமையில் சீவிக்கும் நபர்கள் மிகவும் பரிதாபத்துக்கு உரியவர்கள். இத்தகைய அப்பாவிகளை, நீங்கள் கண்டிருப்பீர்கள். பாசத்தைக் காட்டி, பிள்ளைகளை ஏமாளிகளாக்கும் போது, நியாயம் மௌனிக்கின்றது.

பெற்றோர் அன்பை, பாசத்தை ஒரே மாதிரி, பக்கச் சார்பின்றிச் செலுத்த வேண்டும். அதிகம் உழைக்கும் பிள்ளைகளை ஒரு விதமாகவும் குறைந்த வருமானம் பெறும் பிள்ளைகளை ஊதாசீனம் செய்வதும் அழகல்ல. சமூகத்தில் எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. நியாயமற்று இயங்கலாகாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# வீணடிக்கப்படும் காலம்

மொஹமட் பாதுஷா

மக்களின் பிரச்சினைகளும் நாட்டின் முன்னேற்றமும் கருத்தில் கொள்ளப்படாமல், வெறுமனே காலத்தை வீணடிக்கின்ற அரசியலும் ஆட்சியும் நிறைந்த பூமியாக, இலங்கை மாறியிருக்கிறது.

இந்த ஆட்சியில் மட்டுமன்றி, கடந்த நல்லாட்சிக் காலத்திலும் காலம் இப்படித்தான் கழிந்து போனது.

வாகனத்தில் பயணிக்கும்போது, வீதிக்கு குறுக்காக நின்ற மாடுகளை, வீதியை விட்டு அகற்றும் நோக்கத்தில் வாகனத்தில் இருந்து இறங்கியவர்கள், பிறகு பயணத்தை மறந்து, மாடுகளுக்குப் பின்னாலேயே போய்விடுவதைப் போல, மக்களை மறந்து, பிரச்சினைகளுக்குப் பின்னாலேயே செல்கின்ற ஒரு போக்கைக் காண முடிகின்றது.

மக்களுக்கு ஆயிரத்தெட்டு வாக்குறுதிகளை வழங்கி, பெரும் பரப்புரைகளைச் செய்து, ஆட்சியைப் பிடிப்பவர்கள் பின்னர் எல்லாவற்றையும் மறந்து விடுகின்றனர். இதில் சில பிரச்சினைகள், இயற்கையாகவே தோற்றம் பெறுகின்றன. பல விவகாரங்கள் வேண்டுமென்று, செயற்கைத்தனமாக உருவாக்கப்படுகின்றன.

இலங்கையில், எக்காலத்திலும் ஏதாவது ஒரு குழப்பம் இருந்து கொண்டே இருக்கின்றது. 'பிச்சைக்காரனின் புண்ணைப்போல' சில குழப்பங்கள் 'பராமரிக்கப்படுகின்றன'.

இவ்வாறு குழப்பங்களும் நெருக்கடிகளுமாகக் காலம் கழிவதால், நாட்டின் அபிவிருத்தி, சாதாரண சிங்கள மக்களின் எதிர்பார்ப்பு, தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

உலகின் அநேக நாடுகளிலும் ஏதாவது ஒரு பிரச்சினை, குழப்பம் இருந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், நெருக்கடிகளைச் சாதுரியமாகக் கையாளத் தெரிந்த ஆட்சியாளர்களைக் கொண்டிருக்கின்ற நாடுகள், குழப்பங்கள் குறைந்தளவில் காணப்படும் நாடுகள் போன்றவை பெருமளவு காலத்தை, நாட்டை முன்னேற்றுவதற்காகச் செலவிடுகின்றன.

ஆனால், இலங்கையானது கிட்டத்தட்ட எல்லாக் காலத்தையும் ஏதாவது நெருக்கடிக்காகவே செலவிட்டுக் கொண்டிருக்கின்றது. அதனால், நாம் ஆரம்பித்த இடத்தில் இருந்து, ஒரிரண்டு அங்குல தூரமே முன்னோக்கி நடந்திருக்கின்றோம்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில், குறைந்தது 30 வருடங்கள், ஆயுத மோதலிலேயே கழிந்து போனது. யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு, பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இன நல்லிணக்கம் வெற்றிபெறவில்லை.

மஹிந்த ராஜபக்‌ஷவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில், இனவாதமும் மதவாதமும் இரண்டாவது சிறுபான்மையினமான முஸ்லிம்களை நோக்கி ஏவிவிடப்பட்டன. ஆட்சி மாற்றத்துக்காக மேற்கொள்ளப்பட்ட செயற்கைத்தனமான இந்த நகர்வால் காலம் வீணானதுடன் இன விரிசலும் ஏற்பட்டது.

இதை மூலதனமாக்கியே, நல்லாட்சி அரசாங்கம் 2015இல் ஆட்சிக்கு வந்தது. ஆனால், தேசிய அரசாங்கத்துக்குள் எழுந்த உள்ளகக் குழப்பங்களால், சுமார் நான்கு வருடங்கள் வீணாக்கப்பட்டது.

2019இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள், பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தல் என்ற தோரணையில் மிகுதிக் காலமும் கடந்து போனது.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதமாகப் பயன்படுத்தியே மீண்டும் ராஜபக்‌ஷ குடும்பம், ஆட்சிப் பீடமேறியது. முன்னொருபோதும் இல்லாத எதிர்பார்ப்புகளை, மக்கள் மனங்களில் விதைத்தே அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

மைத்திரி - ரணில் கூட்டு அரசாங்கத்தின் தோல்வி மட்டுமன்றி, மஹிந்த ஆட்சியின் வெற்றிப் பதிவுகளும் மக்கள் மனதில் அதீத எதிர்பார்ப்பை ஏற்படுத்தியதில் ஆச்சரியம் இல்லை.

ஆனால், இரண்டு வருடங்களுக்கு உள்ளேயே, பரவலாக விமர்சிக்கப்படுகின்ற ஒரு நிலைக்கு, இந்த அரசாங்கம் வந்திருக்கின்றது. அநேகமான விடயங்களில் தோல்விகண்டதும் மக்கள் திருப்திப்படும் விதத்தில் ஆட்சியை நடத்தாத ஓர் அரசாங்கமாக இந்த அரசாங்கம் கருதப்படுகின்றது. இது இரகசியமான விடயமல்ல.

பல எதிர்பாராத நெருக்கடிகளை, நாடு சந்தித்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. கொரோனா வைரஸ் பரவல், கப்பல் தீப்பிடித்து மூழ்கியதால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இயற்கை அழிவு, இவ்விரண்டாலும் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி ஆகியவை இதில் முக்கியமானவை.

ஆனால், இலங்கையில் ஏற்பட்டுள்ள இன்றைய நிலைக்கும் ஆட்சிசெலுத்துகையில் ஏற்பட்டுள்ள தேக்க நிலைக்கும், இயற்கையான விடயங்கள் மட்டுமே காரணமல்ல!

மாறாக, இயற்கைப் பேரிடர் காலம் என்று கூடப் பார்க்காது, உருவாக்கப்பட்டுள்ள அரசியல் குழப்பங்களும் சீன - இந்திய ஆதிக்கப் போட்டியும், மேலும் பல வேண்டாத விளைவுகளை உண்டுபண்ணி, நாட்டை அதளபாதாளத்துக்குக் கொண்டு செல்கின்றன.

கடந்த ஜனாதிபதி, பாராளுமன்றம் ஆகிய தேர்தல்களில் ராஜபக்‌ஷ குடும்பம், மக்களின் ஆணையைக் கோரி நின்றது. அபிவிருத்திசார் வாக்குறுதிகளுக்கு மேலதிகமாக, ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதலால் மக்கள் மனங்களில் ஏற்பட்டிருந்த பயமும், பயங்கரவாதத்துக்கு எதிரான இனவாத கருத்தியலும் பெரும் முதலீடாக இருந்தன.

தமக்கு ஆணை வழங்கினால் நாட்டை தலைகீழாகப் புரட்டிப்போடுவோம் என்று ராஜபக்‌ஷர்கள் கூறினர். தாம் நினைத்ததைச் செய்து, நாட்டை முன்னேற்ற வேண்டும் என்றால், மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளை அளிக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டினர்.

அதன்படி, 69 இலட்சம் மக்கள் வாக்களித்ததன் மூலம், பொதுஜன பெரமுனவுக்குப் பெருவெற்றியைக் கொடுத்தனர். அதன்பின்னர், அரசமைப்பில் ஒரு திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்; அதுவே நாட்டுக்கு நல்லது என்பதே, அவர்களது கற்பிதமாக இருந்தது.

அதற்கமைய, 20ஆவது திருத்தமும் நிறைவேற்றப்பட்டது. ஆனால், நாட்டில் பிரச்சினைகளும் பின்னடைவுகளும் அதிகரித்ததே தவிர, குறைந்த மாதிரித் தெரியவில்லை. கொரோனாவை விட, பாரதூரமான அரசியல்சார் வைரஸ்கள் தொற்றியுள்ளன.

இப்போது, பசில் ராஜபக்‌ஷ பாராளுமன்றத்துக்கு வந்தால்தான், நாட்டின் பிரச்சினைகள் தீரும் என்கின்றனர். எனவே, அவருக்கு தேசிய பட்டியல் எம்.பி பதவியும் நிதி அல்லது பொருளாதார அமைச்சும் வழங்கப்பட வேண்டும் என்று கணிசமானோர் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர்.

மறுபுறத்தில், அரசாங்கத்துக்குள் இருக்கின்ற இன்னுமொரு தரப்பே எதிர்க்கின்றது. அவருக்கு அப்பதவி வழங்குவதை சிலர் விரும்பவில்லை எனத் தெரிகின்றது.

பசில் ராஜபக்‌ஷ, அரசாங்கத்துக்குள் ஓர் அதிகாரமுள்ள பதவியில் அமர்ந்தால், நாட்டில் தற்போது இருக்கின்ற அரசியல், பொருளாதார, சுகாதார நெருக்கடிகள் எல்லாவற்றையும் அவர் தீர்த்து வைப்பார் என்று கணிசமானோர் சொல்கின்றனர். மறுபுறத்தில், யார் வந்தாலும் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைளைத் தீர்க்க முடியாது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

இதனால், ஆளும் தரப்புக்கு உள்ளேயே பெரும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. பசில் வந்தால், பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்கின்றார்கள். ஆனால், இப்போது அவருக்கு எம்.பி, அமைச்சு பதவிகள் வழங்கும் விவகாரமே, மேலும் பல முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது.

பசில் ராஜபக்‌ஷ அரசியல் ரீதியில் திறமையானவர். பொருளாதார அபிவிருத்தி விடயத்தில் செயற்றிறன் கொண்டவர் என்று கருதப்படுபவர். ராஜபக்‌ஷர்கள் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கான மூலோபாயத் திட்டம் அவருடையது எனக் கூறப்படுகின்றது.

எனவே, அவர் பாராளுமன்றத்துக்கு வருவதோ அமைச்சராவதோ, ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. ஆனால், அதற்குச் சட்ட ரீதியான தடைகள் இருந்தால் அதுபற்றிச் சிந்திக்கலாம். ஆனால், அவர் உள்ளே வருகின்ற விடயம், இவ்வளவு பெரிய விவகாரமாக பெருப்பிக்கப்பட வேண்டியதில்லை.

இதனை ஒரு தேசிய பிரச்சினையாக்க தேவையில்லை. நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டி இருக்கத் தக்கதாக, இதையும் ஒரு இமாலய விவகாரமாக மாற்றுவது, இன்னும் கொஞ்சக் காலத்தை வீணடிக்கும் நிலைமைக்கே இட்டுச் செல்லும்.

ஆளும் தரப்பில்தான் இந்த நிலை என்றால், எதிரணியில் நிலைமை அதைவிட மோசமாகவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவால் எதிரணியைக் கூட பலமாக, கட்டுக்கோப்பாக வைத்திருக்க முடியாது போயிருக்கின்றது என்பதே நிதர்சனமாகும்.

இந்நிலையில், இந்தக் கதைக்குள் ரணில் விக்கிரமசிங்க மிகச் சூட்சுமமான முறையில் உள் வந்திருக்கின்றார். எனவே, ரணிலின் நகர்வுகளைச் சுற்றிச் சுழலும் அரசியல் புதினங்களில் இன்னும் கொஞ்சக் காலம் வீணாகப் போவதாகவே உள்மனது சொல்கின்றது.

ஆக மொத்தத்தில், ஆளும் தரப்புக்குள்ளும் எதிரணிக்குள்ளும் உள்ளக முரண்பாடுகள் வலுவடைந்துள்ள பின்னணியில், நாட்டு மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்நிலைமை மாற வேண்டும். நாட்டில் தற்போதுள்ள நெருக்கடிகளை முடிவுக்கு கொண்டு வந்து, எல்லா மக்களினதும் அபிலாஷைகளை நிவர்த்தி செய்து, நாட்டை முன்னேற்றுவதிலேயே அரசாங்கமும் ஏனைய தரப்பினர்களும் முழுக்கவனம் செலுத்த வேண்டும்.

அதைவிடுத்து, பிரச்சினைகள் தீர்க்கப்படாமைக்கு இன்னுமொரு பிரச்சினையே காரணம் என்று, மக்களுக்குப் பொய் கற்பிதங்களைக் கூறிக் கொண்டே, ஆட்சிக்காலத்தை வீணடிக்கின்ற கலாசாரத்தை கைவிடுவதே, நாட்டுக்கு நல்லது.

## கடிதங்கள்

### தொடர்ந்தும் புறக்கணிப்பு

கிழக்கு மாகாண கலைஞர்கள் கௌரவிப்பு தெரிவில், அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் தொடர்ந்தும், செய்து வருகின்ற பிழையான செயற்பாடுகளால் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தாம் புறக்கணிக்கப்பட்டு வருவதாக கலைஞர்களும் எழுத்தாளர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பிலான முறைப்பாட்டை, முன்னாள் பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலியிடமும், இன்னாள் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.சாபிரிடமும் முன்வைத்தும் கூட, இந்தப் புறக்கணிப்பு தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

கிழக்கு மாகாண கலைஞர்கள் கௌரவிப்பு - 2021 தெரிவுக்கான பெயர்களைத் தெரிவு செய்ததில்கூட குறைபாடுகள் இடம்பெற்றுள்ளன. விடயதானத்துக்குப் பொறுப்பானவர், குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அறிவித்தல்களை வழங்கியதாக, இவர்கள் குற்றஞ்சாட்டுக்கின்றனர்.

எனினும், 2021 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண கலைஞர்கள் கௌரவிப்பு தெரிவு இடம்பெற்றதாகவும், அதன் பெயர் விவரங்கள் மாகாணப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் உத்தியோகஸ்தர் தெரிவித்துள்ளார்.

கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக, கடந்த வருடமும் இவ்வருடமும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களும் முறையாக இயங்காமல் இருப்பதை யாரும் மறுக்க முடியாத விடயமாகும்.

குறித்த விடயம் தொடர்பான முறைப்பாட்டுக் கடிதத்தை, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்துக்கும் அதன் பிரதிகளை மாகாண பிரதம செயலாளர் துஷித்த பீ. வணிகசிங்க, கிழக்கு மாகாண கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.நவநீதன், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. சாபீர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

பைஷல் இஸ்மாயில்

உத்தர பிரதேசம்

# ஒவைசியின் சவாலை ஏற்கத் தயார்?

அகில இந்திய மஜ்லிஸ் கட்சியின் தலைவர் அசாதுதீன் ஒவைசியின் சவாலை ஏற்க பாரதிய ஜனதா கட்சித் தொண்டர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் மிகப்பெரிய மாநிலமான உத்தர பிரதேசத்தில் அடுத்த ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காக, அரசியல் கட்சிகள் இப்போதிருந்தே தயாராகி வருகின்றன.

இதில், ஓம் பிரகாஷ் ராஜ்பர் தலைமையிலான சுகல்தேவ் பாரதிய சமாஜ் கட்சியுடன் கூட்டணி அமைப்பதாக அசாதுதீன் ஒவைசி அறிவித்தார். அப்போது பேசிய ஒவைசி, “யோகி ஆதித்யநாத்தை மீண்டும் உத்தர பிரதேச முதலமைச்சராக்க அனுமதிக்க மாட்டோம். எங்கள் தரப்பு நியாயம் சரியானது. அதற்காகக் கடுமையாக உழைப்போம். அதன்படியே அனைத்தும் நடக்கும். உத்தர பிரதேசத்தில் பா.ஜ.க ஆட்சியை அகற்றுவோம்” என்றார்.





இதற்குப் பதிலளிக்கும் வகையில், யோகி ஆதித்யநாத் கூறியதாவது: “ஒவைசி ஒரு பெரிய தேசிய தலைவர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் தேர்தல் பிரசாரத்துக்காக செல்கிறார். அவருக்கென்று தனி வாக்கு வங்கி உள்ளது. அவர் பா.ஜ.கவுக்கு சவால் விடுத்துள்ளார். அதனை ஏற்க பா.ஜ.க தொண்டர்கள் தயாராகவே உள்ளனர்” என்றார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக

# ‘ஹொட்’ உடையில் தமன்னா



தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்காக தமன்னா அணிந்து வந்திருந்த உடை, அவரது ரசிகர்களை வெகுவும் கவர்ந்துள்ளது.

தமன்னா ஹொட் உடையில் டிவி ஷோ தொகுத்து வழங்கி இருக்கும் இந்தப் புகைப்படங்களை, சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் உற்சாகமாகப் பகிர்ந்து வருகின்றனர்.

‘மாஸ்டர் செஃப்’ நிகழ்ச்சியைத் தெலுங்கில் தொகுத்து வழங்கி வரும் தமன்னாவின் சூடான புகைப்படங்களே இவ்வாறு பகிரப்படுகின்றன.

இதே நிகழ்ச்சியை தமிழில் நடிகர் விஜய் சேதுபதி தொகுத்து வழங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கௌஹாத்தி

அசாமில்

## முஸ்லிம்கள் இரு குழந்தைகள் மட்டும்தான் பெறவேண்டும்



அசாமில் ஹிம்மந்த் பிஸ்வாஸ் சர்மா தலைமையில் பாரதிய ஜனதா ஆட்சி நடைபெறுகிறது. அசாமில் இஸ்லாமியர்கள், வங்கதேசத்தை சேர்ந்தவர்கள், மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்டோர் குறித்த கணக்கெடுப்பை நடத்த மாநில அரசாங்கம் நீண்டகால முயற்சி மேற்கொண்டு வருகிறது. அப்போதுதான் இவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப, அவர்களுக்கு இடஒதுக்கீடு, சலுகைகள், இன்ன பிற அரசாங்க ஆதாயங்களை வழங்க முடியும். மக்கள் நலம் கருதியே மக்களது பூர்வீகம், மதம் தொடர்பான கருத்துக் கணிப்பு நடத்தப்படுவதாக முதலமைச்சர் ஷர்மா தெரிவித்துள்ளார்.

இவர்களுள் இஸ்லாமிய மக்களின் நலனுக்காக அவர்களது மதத்தைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள், தலைவர்களைச் சந்திக்க முதலமைச்சர் விரும்பினார். இதனை அடுத்து அசாம் மாநிலத்தில் இஸ்லாமிய குழுக்களுக்கு தலைமை வகிக்கும் 150 முக்கியஸ்தர்களுடன் முதலமைச்சர் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார்.

சிறுபான்மையினர் நலனுக்காக அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் நலத்திட்டங்கள் குறித்து அவர்களிடம் விவரித்த முதலமைச்சர் ஷர்மா, அசாம் மாநிலத்தில் வசிக்கும் முஸ்லிம்கள் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளக் கூடாது என்று வலியுறுத்தினார். இதனால் மாநிலத்தின் மக்கள் தொகை கட்டுக்குள் இருக்கும். மாநிலம் எதிர்காலத்தில் வளர்ச்சி அடையும்” என்றார்.

சென்னை

எரிபொருள் விலை ஏற்றத்தை கண்டித்து

## சைக்கிளில் கண்டன ஆர்ப்பாட்டம்



இந்தியாவில் கடந்த சில மாதங்களாக பெற்றோல், டீசல் தொடர்ந்து விலை உயர்ந்து கொண்டு செல்லுகின்றது.

இந்நிலையில்,தேசிய முன்னேற்ற திராவிட கழகப் பொருளாளர் பிரேமலதா சைக்கிளில் சென்று கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினார்.

இதேபோல் பல பகுதிகளில், டீசல் விலை ரூ. 100 தாண்டியுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல கட்சிகளும் போராட்டம் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், சென்னை, பாரிமுனையில் பெற்றோல் விலை உயர்வைக் கண்டித்து தே.மு.தி.க பொருளாளர் பிரேமலதா சைக்கிளில் சென்று கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்.

# கைகழுவிய சந்திரமுகி; நினைத்து அழுத சதா

ஜெயம் ரவியுடன் ‘ஜெயம்’ படம் மூலம் தமிழ்த் திரையுலகுக்கு வந்தவர் சதா. முதல் படத்திலேயே தன் நடிப்பாலும், அழகாலும் ரசிகர்களை கவர்ந்தார்.



தொடர்ந்து எதிரி, வர்ணஜாலம், அந்நியன், திருப்பதி, நான் அவள் அது, புலி வேசம், எலி, டார்ச்லைட் ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். அவர் தமிழ் தவிர்த்து, தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி படங்களிலும் நடித்து வருகிறார்.

இந்நிலையில் சதா பேட்டியொன்றில் கூறியது பலரையும் வியக்க வைத்திருக்கிறது.

அதாவது, பி. வாசு இயக்கத்தில் ரஜினிகாந்த், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, மாளவிகா உள்ளிட்டோர் நடிப்பில் கடந்த 2005ஆம் ஆண்டு வெளியான சந்திரமுகி படம் சூப்பர் ஹிட்டானது. அந்த படத்தில் நடிக்க சதாவுக்கு வாய்ப்பு கிடைத்ததாம்.

இது குறித்து சதா கூறியுள்ளதாவது,

“சந்திரமுகி படத்தில் நடிக்க இரண்டு முறை வாய்ப்பு வந்தது. ஆனால், சில சூழல்கள் காரணமாக சந்திரமுகி பட வாய்ப்பை ஏற்க முடியவில்லை. அதை நினைத்து நான் சில நேரம் அழுக் கூட செய்திருக்கிறேன்” என்றார்.

சந்திரமுகி படத்தில் மாளவிகா நடித்த கதாபாத்திரத்தில் நடிக்குமாறு சதாவிடம் கேட்டதற்கு, நான் நடித்தால் ஹீரோயினாக மட்டுமே நடிப்பேன் என்று அவர் வாசுவிடம் கூறியதாக அப்பொழுது பேச்சாக இருந்தது.

திருநெல்வேலி

கொரோனா ஊரடங்கு தளர்வு:

## கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் திறப்பு



கொரோனா ஊரடங்கில் கூடுதல் தளர்வுகளைத் தொடர்ந்து, அனைத்து வழிபாட்டுத் தலங்களும் நேற்று முதல் செயற்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் என அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் கிருமிநாசினி தெளித்து சுத்தப்படுத்தும் பணிகள் நடைபெற்றன.

இதுபோல், பள்ளிவாசல்கள், தேவாலயங்களையும் சுத்தப் படுத்தி, தயார்படுத்தும் பணிகள் நடைபெற்றன. வழிபாட்டு தலங்களுக்குச் செல்வோர் தனிமனித இடைவெளியை கடைபிடித்து, முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. குமரி மாவட்டத்தில் உள்ள கோவில்களை திறந்து பூஜைகள் நடத்தப்படுகிறன.

மும்பை

## சிவசேனா, பா.ஜ.வின் எதிரி அல்ல; நண்பன்



சில விடயங்களில் கருத்து வேறுபாடு இருந்தாலும், சிவசேனா, பாரதிய ஜனதா கட்சியின் எதிரி அல்ல; நண்பர் தான் என மஹாராஷ்டிர பா.ஜ.க தலைவர் தேவேந்திர பட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்டிராவில் கடந்த 2019ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலில் பா.ஜ.கவுடன் இணைந்து போட்டியிட்ட சிவசேனா, கருத்து வேறுபாடு காரணமாக காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து ஆட்சி பொறுப்பேற்றது. இதனால், பா.ஜ.க - சிவசேனா இடையே அவ்வப்போது கருத்து மோதல்கள் இருந்து வந்தன.

இதற்கிடையே பிரதமர் மோடியை, மஹாராஷ்டிர முதலமைச்சர் உத்தவ் தாக்கரே சமீபத்தில் சந்தித்து பேசினார். மத்திய இணை அமைச்சருமான ராம்தாஸ் அத்வாலே, “மஹாராஷ்டிராவில் பா.ஜ.க, சிவசேனா இடையேயான உறவைப் புதுப்பிக்க வேண்டிய தருணம் வந்துள்ளது” எனக் கூறியிருந்தார்.

51 வயதிலும்

## ஸ்லிம்மாக மாறிய லட்சுமி ராமகிருஷ்ணன்!



தமிழ் சினிமாவில் நாயகியாகவும் அதன் பின்னர் தற்போது குணச்சித்திர வேடங்களிலும் நடித்து வருபவர் லட்சுமி ராமகிருஷ்ணன்.

மேலும், இவர் ‘ஜீ தமிழ்’ தொலைக்காட்சியின் ‘சொல்வதெல்லாம் உண்மை’ என்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். தற்போது யூடியூப் சேனல் ஒன்றில் ‘நான் வீழ்வேனென்று நினைத்தாயோ’ என்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி வருகிறார்.

தற்போது 51 வயதாகும் இவர் உடல் எடையை குறைத்து ஒல்லியாக மாறியுள்ளார். இந்த புகைப்படங்களை அவர் இன்ஸ்டாகிராமில் வெளியிட சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகிறது.

சென்னை

கூட்டம் கூட்டமாகச் செல்லாதீர்கள்

## மெரினா கடற்கரை திறப்பு



தமிழகத்தில் கொரோனா ஊரடங்கில், தொடர்ந்து தளர்வுகளை அரசாங்கம் அறிவித்து வருகிறது. கடற்கரைகளில் நடைபயிற்சி மேற்கொள்ள மட்டும் அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது.

அந்த வகையில், உலகப் புகழ்பெற்ற சென்னை மெரினா கடற்கரை திறக்கப்பட்டது. மெரினா கடற்கரை நோக்கி மக்கள் படையெடுத்து வந்தனர்.

கொரோனா தாக்கம் குறைந்துகொண்டிருக்கிறது என்றாலும், இன்னும் முற்றிலும் ஒயவில்லை. இந்தநிலையில், மக்கள் ஆபத்தை உணராமல் கூட்டம் கூட்டமாக சுற்றித் திரிவதால் மறுபடியும் கொரோனா அலை வேகம் எடுக்குமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. எனவே கடற்கரையில் மக்கள் கூட்டம் சேரக்கூடாது பொலிஸார் தீவிரமாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# லொஸ்லியாவின் புதிய அவதாரம்

‘பிக்பாஸ்’ நிகழ்ச்சியின் மூலம் பிரபலமானவர் லொஸ்லியா. அந்நிகழ்ச்சி மூலம் அவருக்கு ஏராளமான ரசிகர்கள் உருவானார்கள்.

‘பிக்பாஸ்’ நிகழ்ச்சிக்குப் பின்னர் அவருக்குப் பட வாய்ப்பும் குவிந்து வருகிறது. அந்த வகையில், அவர் கைவசம் ‘பிரெண்ட்ஷிப்’, ‘கூகுள் குட்டப்பன்’ உட்பட இரு படங்கள் உள்ளன.

இதில் ‘பிரெண்ட்ஷிப்’ படத்தின் படப்பிடிப்பு முடிந்து பின்னணி பணிகள் நடந்து வருகிறன. ஜான் பால் ராஜ், ஷாம் சூர்யா இணைந்து இயக்கி இருக்கும் இப்படத்தில் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங்குக்கு ஜோடியாக நடித்துள்ளார் லொஸ்லியா.

இந்நிலையில், இப்படத்தின் மூலம் நடிகை லொஸ்லியா, பாடகியாகவும் அறிமுகமாகி உள்ளார்.

ஆம், ‘பிரெண்ட்ஷிப்’ படத்தில் இடம்பெறும் ‘அடிச்சு பறக்கவிடுமா’ என்கிற குத்துப் பாடலை தேவாவுடன் இணைந்து பாடியுள்ளார் லொஸ்லியா. இந்தப் பாடல் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

காசியாபாத்

இந்தியாவில்

## முஸ்லிம்களுக்கு ஆபத்து இல்லை

### குழுக்கள் வேண்டாம் என்கிறார் ஆர்.எஸ்.எஸ். தலைவர்



இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் யாருக்கும் ஆபத்து இல்லை. முஸ்லிம்கள், இந்துக்கள் என்ற இரு குழுக்கள் வேண்டாம். இணைந்து வாழ்வதே நாட்டின் வளர்ச்சிக்கு உகந்தது என ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன்பகவத், உத்தரப் பிரதேசத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் இஸ்லாமிய பிரிவான முஸ்லிம் ராஷ்ட்ரிய மஞ்ச் கூட்டம் காசியாபாத்தில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் மோகன் பகவத் பேசியதாவது: “இந்தியாவில் உள்ள இஸ்லாமியர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு கூறுபவர்கள், இந்துக்களே அல்ல. வழிபாட்டை வைத்து மக்களை வேறுபடுத்த முடியாது. அனைத்து இந்தியர்களுக்கும் டி.என்.ஏ ஒன்றுதான் . இந்தியா போன்ற ஒரு ஜனநாயகத்தில், இந்துக்கள் அல்லது முஸ்லிம்களைக் காட்டிலும் இந்தியர்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்த முடியும் .முஸ்லிம்கள் இங்கு வாழக்கூடாது என்று கூறுபவர் ஒர் இந்து அல்ல; பசு புனிதமானது. இதைக் கொல்வது தவறு. இதுபோல், ஒரு மனிதனை கொல்வதும் இந்து தர்மத்துக்கு எதிரானது. இவர்கள் மீது சட்டம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

சிவகங்கை

## குடிசைகளாலான அம்மன் கோவில்கள்



சிவகங்கை அருகே மேலச்சாலூரில் 400இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்களில் 90 சதவீதம் பேர் விவசாயிகள்.

இவ்வூரில் உள்ள பழமையான மூன்று அம்மன் கோவில்கள் (பொன்னழகியம்மன், பச்சநாச்சி அம்மன், சருவுடை நாச்சி அம்மன்) குடிசைகளிலேயே உள்ளன. இதனால், அப்பகுதி மக்களும் குடிசைகளிலேயே வசித்தனர். கடந்த 2006ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இவ்வூரில் 400 குடிசை வீடுகள் இருந்தன. மேலும் ஆட்டுக்கல், விறகு அடுப்புகளையே பயன்படுத்தி வருகின்றனர். காஸ் அடுப்பு பயன்படுத்துவதில்லை.




ஆப்கானிஸ்தான்

அரசாங்கப் படைகள் வெளியேறுகின்றன;

# கைப்பற்றுகிறது தலிபான்

வட ஆப்கானிஸ்தானில் தலிபானின் முன்னெடுப்பானது வேகம் எடுக்கின்றது. வெளியேறுகின்ற ஆப்கானிஸ்தான் படைகளிடம் இருந்து சனிக்கிழமை (03) இரவு சில மாவட்டங்களை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.



இந்நிலையில், சில நூற்றுக்கணக்கான ஆப்கானிஸ்தான் படையினர் எல்லையைக் கடந்து தஜிகிஸ்தானுக்குள் சென்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில், தற்போது ஆப்கானிஸ்தானின் 421 மாவட்டங்களின் மூன்றிலொன்றை தலிபான் கட்டுப்படுத்துகின்றது.

இந்நிலையில், வடகிழக்கு படக்ஷன் மாகாணத்தில் அண்மைய நாள்களில் பெறப்பட்ட முன்னேற்றங்கள் பெரும்பாலும் மோதலில்லாமல் தலிபானிடம் சென்றதாக மாகாண சபை உறுப்பினர் மொஹிப்-உல் ரஹ்மான் தெரிவித்துள்ளார். படைகளிடையேயான மனப்பாங்கு, விநியோகங்கள் இல்லாமை காரணமாகவே குறித்த நிலை ஏற்பட்டதாக ரஹ்மான் மேலும் கூறியுள்ளார்.




கனடாவின் மேற்கு மாகாணமான பிரித்தானியக் கொலம்பியா, நாட்கணக்காக வரலாறு காணாத வெப்பநிலை அளவீடுகளைப் பதிவு செய்ததைத் தொடர்ந்து, தொடரானதொரு பாரிய காட்டுத்தீ பரவல்களுடன் போராடுகிறது.



பிலிப்பைன்ஸ்

விமான விபத்து விவகாரம்:

## விசாரணைக்கு உத்தரவு

பிலிப்பைன்ஸ் விமானப் படை விமானத்தில் இருந்த 96 பயணிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என, பிலிப்பைன்ஸின் இராணுவத் தலைவர் சில்ரிலிட்டோ சொபெஜனா, நேற்றுத் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்தில் 47 மரணமடைந்தனர்.

இவ்விபத்தில் 49 இராணுவத்தினர் காயமடைந்தனர் என சொபெஜனா மேலும் கூறியுள்ளார்.

இந்நிலையில், தரையிலிருந்த மூன்று பொதுமக்களும் கொல்லப்பட்டனர் என பிலிப்பைன்ஸின் தேசிய பாதுகாப்பு திணைக்களம் நேற்று முன்தினம் (04) தெரிவித்திருந்தது. தவிர, நான்கு பொதுமக்கள் காயமடைந்திருந்தனர்.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான படைகளைக் காவிய லொக்ஹீட் சி-130 போக்குவரத்து விமானமானது, தென் சுலு மாகாணத்திலுள்ள ஜொலோ விமான நிலையத்தில் தரையிறங்கிய பின்னர் ஓடுபாதையைத் தாண்டிச் சென்றதாக பிலிப்பைன்ஸின் இராணுவப் பேச்சாளர் கேணல் எட்கார்ட் அரெவலோ கூறியிருந்தார்.

இந்நிலையில், இச்சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் டெல்ஃபின் லொரென்ஸானா தெரிவித்துள்ளார்.

ஜப்பான்

சேதமடைந்த வீடுகளிலிருந்து

## உயிர் தப்பியவர்கள் மீட்பு

கடும் மழையுடன் போராடுகின்ற மீட்பு அணிகள், ஜப்பானியக் கரையோர நகரமான அடாமியை நிலச்சரிவு ஒன்று தாக்கிய பின்னர், சேதமடைந்த வீடுகளில் இருந்து உயிர் தப்பியவர்களை மீட்டுள்ளனர்.

இந்நிலையில், இதுவரையில் மீட்கப்பட்ட 19 பேருக்குள் வயதானோரும் உள்ளடங்குவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவர்கள் 26 மணித்தியாலங்களுக்குப் பின்னர் மீட்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், இன்னும் 80 பேர் காணாமல்போய் உள்ளதுடன், மூவர் உயிரிழந்துள்ளனர்.



ஐ. அமெரிக்கா

## தகர்ந்த கட்டடம் அழிப்பு

ஐக்கிய அமெரிக்காவின் மியாமி பகுதியிலுள்ள பகுதியளவில் தகர்ந்த அடுக்குமாடிக் குடியிருப்பு நேற்று முன்தினம் (04) தரைமட்டமாக்கப்பட்டு உள்ளது.

பருவகால எல்ஸா புயல் சென்றடைவதற்கு முன்பாகவே 24 பேர் இறந்ததாக உறுதிப்படுத்தப்பட்ட இக்கட்டடம் அழிக்கப்பட்டது.

இந்நிலையில், காணாமல் போன 121 பேரைத் தேடும், மீட்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கட்டடம் அழிந்த பின்னர் மீட்புப் பணிகள் ஆரம்பமாகும் என மியாமி டேட் கவுண்டி மேயர் டேனியல்லா லெவினே கவா செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.



தென்னாபிரிக்கா

## ஸூமாவின் கைதைத் தடுக்க மனித வளையம்

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஸூமா கைது செய்யப்படுவதைத் தடுக்க அவரின் ஆதரவாளர்கள், அவரது வீட்டைச் சுற்றி மனித வளையம் ஒன்றை அமைத்திருந்தனர்.

நேற்று முன்தினம் (04) நள்ளிரவுக்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி ஸூமா கைது செய்யப்பட வேண்டும் எனக் காலக்கெடு விதிக்கப்பட்டபோதும், அவருக்கு அளிக்கப்பட்ட சிறைத் தண்டனையைச் சவாலுக்கு உட்படுத்தும் வழக்கை விசாரிக்க அரசியலமைப்பு நீதிமன்றம் பின்னர் இணங்கியிருந்தது.



# ஒஸ்திரியன் குரான்பிறீ: வென்றார் வெர்ஸ்டப்பன்

ஒஸ்திரியன் குரான்பிறீ’ ஓட்டுநர் போட்டியில், றெட்புல்அணியின் மக்ஸ்வெர்ஸ்டப்பன் வென்றுள்ளார். இப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.



மெர்சிடீஸ்அணியின் வல்டேரிபோத்தாஸ் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார். மக்லரென்அணியின் லான்டோ நொரிஸ் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அந்தவகையில், இவ்வாண்டுக்கான போர்மியுலாவண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 182 புள்ளிகளுடன்முதலாமிடத்தில்நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த வெர்ஸ்டப்பன் பெற்றுக்கொண்டார்.

நடப்புச்சம்பியனான மெர்சிடீஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன் 150 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் உள்ளார். மூன்றாமிடத்தில் றெட்புல் அணியின் மற்றைய ஓட்டுநரான சேர்ஜியோபெரேஸ் 104 புள்ளிகளுடன் காணப்படுகின்றார்.

## கிறிஸ்டல் பலஸின் முகாமையாளராக வியர்ரா

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான கிறிஸ்டல் பலஸின் முகாமையாளராக றோய் ஹொட் கஸ்டனைப் பிரதியிட அக்கழகம் பற்றிக் வியர்ராவை நியமித்துள்ளது.



கிறிஸ்டல் பலஸுடன் மூன்றாண்டு ஒப்பந்தத்தில் வியர்ரா கைச்சாத்திட்டிருந்தார்.

பிரெஞ்சு லீக் 1 கழகமான நீஸால் கடந்தாண்டு டிசெம்பரில் வியர்ரா நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜுவென்டஸிலேயே நீடிக்கும் றொனால்டோ?

இத்தாலிய சீரி கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் முன்கள வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ, அக்கழகத்திலேயே எதிர்வரும் 2023ஆம் ஆண்டு வரை நீடிப்பார் எனத்தெரிகிறது.

ஏனெனில், 36 வயதான றொனால்டோவின் ஒப்பந்தமானது அடுத்தாண்டு முடிவடைகின்ற நிலையில், அதை ஓராண்டு நீடிக்க அவரின் முகவர் ஜோர்ஜ் மெண்டிஸ் பணியாற்றுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2018ஆம் ஆண்டு ஜுவென்டஸின் இணைந்த றொனால்டோ, 97 போட்டிகளில் 81 கோல்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பார்சிலோனாவிலிருந்து விலகும் பிஜானிச்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனா, தமது மத்தியகள வீரரான மிரலெம் பிஜானிச்சை விடுவிக்கத் தயாராகியுள்ளதாகக் கூறப்படுகிறது,



பார்சிலோனாவின் முகாமையாளரான றொனால்ட் கூமனின் திட்டங்களில் 31 வயதான பிஜானிச்சும் பின்கள வீரரான சாமுவேல் உம்டிட்டியும் இல்லாத நிலையிலேயே இருவரையும் விடுவிக்க பார்சிலோனா தயாராகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரில் பிஜானிச் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் நீண்ட காலமாக பிஜானிச்சை ஒப்பந்தம் செய்ய விருப்பம் காட்டியிருந்ததுடன், இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனும் அவரைக் கைச்சாத்திட விருப்பம் காட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## வெள்ளையடிப்பிலிருந்து தப்பிய இலங்கை

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் வெள்ளையடிக்கப்படுவதில் இருந்து இலங்கை தப்பியுள்ளது.



இரண்டுஅணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட தொடரில், பிறிஸ்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் மழைகாரணமாக முடிவுகிடைக்கப்பெறாத நிலையிலேயே வெள்ளையடிக்கப்படுவதில் இருந்து இலங்கை தப்பியிருந்தது.

இத்தொடரின் நாயகனாக டேவிட்வில்லி தெரிவாகியிருந்தார்.

ஸ்கோர்விவரம்:

நாணயச்சுழற்சி: இங்கிலாந்து

இலங்கை: 166/10 (41.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: தசுன்ஷானக ஆ.இ 48 (65) ஓட்டங்கள். பந்துவீச்சு: டொம் கர்ரன் 4/35, கிறிஸ்வோக்ஸ் 2/28, டேவிட்வில்லி 2/36, அடில்ரஷீட் 1/35) தொடரின்நாயகன்: டேவிட் வில்லி

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 6 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.